**அம்பாறை நகர சபை - 2020**

------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பாறை நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.
1

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அம்பாறை நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தலுக்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்திலிருந்து சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டும். |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 118,801, ஆன பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட வேண்டியது கைத்தவறுதலாக மறக்கடிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டிற்காக மாகாண சபையிடமிருந்து கிடைக்கப் பெற வேண்டிய அலுவலக சம்பளம் மற்றும் உறுப்பினர்களின் கொடுப்பனவு ரூபா 6,204,993 கணக்கிலிடப்பட்டிருக்க வில்லை. | கணக்கிடப்படும் போது கைத்தவறுதலாக அது குறிப்பிட்டுக் கொள்வதற்கு விடுபட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (iii) | உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரமின்றி பெறப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 6,955,377 நிதிக்கூற்றுக்களில் இருந்து நீக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் பிரகாரம் இந்தக் கடையை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. அதனால் மீண்டும் இந்த கடைகள் மதிப்பிடப்பட்டு விலை குறைக்கப்பட்டிருப்பதுடன் இந்த விபரங்கள் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் நிலுவை வருமானங்களை நீக்கிவிடுவதற்கு உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டிற்குரிய 04 நிறுவனங்களிடமிருந்து பெறப்பட வேண்டிய விளம்பர பிரசாரத்திற்குரிய ரூபா 515,000 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | விளம்பர பிரசாரம் கணக்கிடப்படுவது தவறுதலாக கைவிடுதல் இடம்பெற்றுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலுவையாக இருந்த கடை வாடகையின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய நூற்றுக்கு 10 ஆன தாமதக் கட்டணம் ரூபா 288,396 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | கடை வாடகை தாமதக் கட்டணம் கணக்கிடப்படுவது தவறுதலாக கைவிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (vi) | அம்பாறை மக்கள் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ள 2012 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக தேசிய வருமானங்கள் திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,742,214 வை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணத்தை தேசிய வருமான திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (vii) | 2019 ஆம் ஆண்டிலே பொருள் மெய்மையாய்வின் ஊடாக நீக்கப்பட்டிருந்த உருப்படி 23 இன் பெறுமதியான ரூபா 381,011 வை கணக்குகளில் இருந்து நீக்கியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு விடயம் 03 இன் பெறுமதி அதற்கு நிகரான அறிக்கையுடன் இணக்கப்படுத்தும் போது அதற்கிடையில் ரூபா 902,283 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் ஆண்டிலே சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஆவணங்கள் சரியாக நாளதுவரையாக்கப் பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,268,364 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,360,541 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் 01 வருடம் முதல் 07 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு உரிய அறவிடப்பட வேண்டிய வீதவரி ரூபா 29,197,637 அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்பட வேண்டிய நிலுவை கடை வாடகை ரூபா 6,393,580 அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிலுவைக் கடை வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (iii) | மாகாண சபையின் பிரதான செயலாளரின் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் 2020 திசெம்பர் 31 இல் கிடைக்கப்பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 388,501 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,611,006 ஆகும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 செயற்பாட்டு பலவீனம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்பாறை நகரின் 80 கடைகளின் வாடகை 2009 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பிடப்பட்டு வாடகை திருத்தத்திற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. மேலும் கடைகளின் வாடகை ரூபா 1,625 இல் இருந்து ரூபா 5,050 வரையான வீச்சில் காணப்பட்டதுடன் அது சந்தை வாடகையின் பிரகாரம் மிகவும் குறைந்த பெறுமதியாகும். | தனிப்பட்ட உரிமையின் அடிப்படையில் குத்தகைக்கு வவழங்கப் பட்டுள்ள அண்மையில் காணப்படுகின்ற கடைகள் உயர் மட்டத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் நகரசபைக்கு சொந்தமாக காணப்படுகின்ற புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டிய 77 கடைகளுடன் ஒப்பிடுவது பிரயோகமானதல்ல. அதனால் உரிய மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. | கடைகள் புனர்நிர்மாணப் படுத்தப்பட்டு புதிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு வாடகைக்கு வழங்கப்பட வேண்டும். |